Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 | நடுநிலை நாளிதழ் | ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 141 | திங்கள் Monday | 23.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# 7,712 விடியல் பேருந்துகள்; 897.82 கோடி விடியல் பயணங்கள்

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பெருமிதம்



சென்னை:

விடியல் பயணம்;புதிய எதிர்காலத்தை எழுதிய முதல் கையெழுத்து என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். 'மகளிர் மட்டுமல்ல, திருநர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோரும் விடியல் பயணத் திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் நாம் செயல்படுத்திய திட்டம் விடியல் பயணத்திட்டம்.அடுத்தடுத்து எல்லாமாநிலங்களும் எதிரொலியாக்கத் தொடங்கியது விடியல் பயணத் திட்டம்' எனவும் தெரிவித்துள்ளார்

மேலும் முதலமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது; "விடியல் பயணம்: புதிய எதிர்காலத்தை எழுதிய முதல் கையெழுத்து

திராவிடமாடலில், விடியல் பேருந்துகள் – 7,712

மார்ச் 1 வரையில்,

2021–22 – 95.86 கோடி

2022–23 – 166.53 கோடி

2023–24 – 186.35 கோடி

2024–25–213.94கோடி–தமிழ்நாடு செய்திகள்

2025–26 – 235.14 கோடி

என மொத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள விடியல் பயணங்கள் – 897.82 கோடி

பாதுகாப்பான, சுதந்திரமான பயணங்களால் மகளிர்முன்னேற்றத்தில் புதிய உயரங்களை எட்டியிருப்பதோடு, ஆண்டுக்கு ஆண்டு விடியல் பயணங்கள் தொடர்ந்து உயர்ந்துகொண்டே போவது இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பறைசாற்றுகிறது.

மகளிர் மட்டுமல்ல, திருநர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோரும் இத்திட்டத்தில் பயன்பெறுகின்றனர்.

இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாட்டில் நாம் செயல்படுத்திய இந்தத் திட்டம், அடுத்தடுத்து எல்லாமாநிலங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது. யார் வந்தாலும் மாற்ற முடியாது என்றநிலையை அடைந்திருக்கிறது.

திராவிடமாடல் 2.0–வில் இந்தத்திட்டம் இன்னும் மேன்மையடையும். இது StalinStatement!' என பதிவிட்டுள்ளார்.

# புதுச்சேரியில் போட்டியிடும் 2 அதிமுக வேட்பாளர்களை பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்





புதுச்சேரியில் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 9 ஆம் தேதி நடைபெறவிருக்கிறது. இதனைத்தொடர்ந்து கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகளும் தொகுதிப்பங்கீடு குறித்தான பேச்சுவார்த்தைகளும் விறுவிறுப்பாக போய்க்கொண்டு இருக்கின்றன. இந்த சமயத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் அதிமுகவிற்கு அக்கூட்டணியில் இரண்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த தொகுதிகள் போட்டியிடப்போகும் அதிமுக வேட்பாளர்களை எடப்பாடி பழனிச்சாமி அறிவித்திருக்கிறார்.அதன்படி உப்பளம் தொகுதியில் ஏ.அன்பழகன் போட்டியிடுகின்றார். அதனைத்தொடர்ந்து உருளையன்பேட்டை தொகுதியில் ஏ.காந்தி போட்டியிடுகின்றார். இதனை எடப்பாடி பழனிச்சாமி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்

இந்நிலையில் புதுச்சேரி அரசியலில் நேற்று வரை கூட்டணி தொடர்பாக பரபரப்பான சூழலே நிலவி வந்தது.ஒருபக்கம் திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டணியில்தொடர்ந்து இழுபறியான நிலை போய்க்கொண்டு இருக்கின்றது. மறுபக்கம் திடீரென முதலமைச்சர் ரங்கசாமி தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகும் வாய்ப்பிருப்பதாக சொல்லப்பட்டது.

ஜோஸ் சார்லஸ் மார்டினின் லட்சிய ஜனநாயக கட்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற கூடாது என ரங்கசாமிசொன்னதாகவும்,இதற்குபாஜகமறுத்ததால் ரங்கசாமி இக்கூட்டணியை விட்டு விலக வாய்ப்பிருப்பதாக தகவல்கள் வந்தன. ஆனால் தற்போது பேச்சுவார்த்தை எல்லாம் சுமுகமாக முடிவடைந்து ரங்கசாமி சமரசமாக சென்றுவிட்டார் என தெரிகின்றது. தேசிய ஜனநாயக கூட்டணியில் லட்சிய ஜனநாயக கட்சி இணைந்துவிட்டது. இவர்களின் தொகுதிப்பங்கீடும் கிட்டத்தட்ட முடிவாகிவிட்டதாம்.. தேசிய ஜனநாயக கூட்டணியில் ரங்கசாமியின் என்.ஆர் காங்கிரஸ் கட்சிக்கு 16 தொகுதிகளும், பாஜகவிற்கு 10 தொகுதிகளும், அதிமுக மற்றும் லட்சிய ஜனநாயக கட்சிக்கு தலா இரண்டு தொகுதிகளும் ஒதுக்கப்பட்டு இருப்பதாக தகவல்கள் வருகின்றன.

இந்த இரண்டு தொகுதிகளுக்கான வேட்பாளர்களை தான் அதிமுக தற்போது அறிவித்துள்ளது. அதிமுகவை பொறுத்தவரை இரண்டு தொகுதிகள் என்பது மிகவும் குறைவாக இருப்பதாக கருதுகின்றனர்.இருந்தாலும் ஆட்சியிலும் அதிகாரத்திலும் அதிமுக கண்டிப்பாக பங்கு கேட்போம் என்கின்றனர். அதுமட்டுமல்லாமல் அமைச்சரவையிலும் அதிமுக கண்டிப்பாக இடம்பெறும் என தெரிவித்து வருகின்றனர்.

ஆனால்புதுச்சேரி மக்களோ, அதிமுகவிற்கு கொடுக்கப்பட்டதே இரண்டு தொகுதிகளாக இருக்கும்நிலையில் எப்படி அவர்களுக்கு ஆட்சியில் பங்கு கிடைக்கும் என பேசி வருகின்றனர். தமிழகத்தில் அதிமுக தலைமையில்தான் கூட்டணி உள்ளது. ஆனால் புதுச்சேரியில் அதிமுகவிற்கு இரண்டே தொகுதிகள் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. என்னதான் புதுச்சேரியில் மொத்தமே 30 தொகுதிகள் தான் என்றாலும் அதிமுகவிற்கு இரண்டு தொகுதிகள் என்பது மிகவும் குறைவான எண்ணிக்கையாகவே பார்க்கப்படுகின்றது. உப்பளம் மற்றும் உருளையன்பேட்டை என இரு தொகுதிகள் அதிமுகவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் உப்பளம் தொகுதியில் அதிமுகவின் புதுச்சேரி மாநில கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அன்பழகன் போட்டியிடுகின்றார். அதைத்தொடர்ந்து உருளையன்பேட்டையில் புதுச்சேரி மாநில கழக முன்னாள் துணை செயலாளர் காந்தி போட்டியிடுகின்றார். இதன் அறிவிப்பை தான் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிதற்போது அறிவித்திருக்கிறார்

உப்பளம் மற்றும் உருளையன்பேட்டை என இந்த இரண்டு தொகுதிகளிலும் அதிமுக வெற்றிபெறுமா? வெற்றிபெற்றாலும் அவர்களுக்கு ஆட்சி மற்றும் அதிகாரத்தில் அதிமுகவினர் கேட்பதை போல பங்கு கொடுக்கப்படுமா? என்பதனை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது

# திமுக கூட்டணியில் இருந்து தவாக விலகல் வேல்முருகன் அறிவிப்பு




சென்னை: திமுக கூட்டணியிலிருந்து தமிழக வாழ்வுரிமை கட்சி விலகுவதாக அக்கட்சியின் தலைவர் வேல்முருகன் அறிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த தவாக தலைவர் வேல்முருகன், "2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் முதல் திமுக கூட்டணியில் இடம்பெற்று மதசார்பற்ற சக்திகளோடு கூட்டணியில் பயணித்து வந்தோம். இந்தச் சூழலில் திமுக பேச்சு வார்த்தைக்குழுவுடன் முதல் கட்ட பேச்சு வார்த்தையில் ஈடுபட்டோம். அதில் எங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்குவதாக திமுக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது நாங்கள் ஒரு இடத்தை எங்களால் ஏற்க முடியாது என்றும், கூடுதல் இடங்கள் ஒதுக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தோம். மேலும், தமிழக மக்களின் நலனுக்கான திமுக அரசிடம் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்தோம். எங்கள் கோரிக்கைகளை அரசு பொருட்படுத்தவில்லை. இதனால் திமுக கூட்டணியில் இருந்து தவாக விலகுகிறது. என்றார். தொடர்ந்து பேசிய அவர், "நாங்கள் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்ததை திமுகவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.இதனால் பெரியண்ணன் மனநிலையில், திமுக எங்களை புறக்கணித்தது. அதேபோல, நான் திமுக கூட்டணியில் இருப்பதை தமிழரல்லாத, தமிழர் விரோத அதிகாரிகள் விரும்பவில்லை.எனவே என்னை திமுக கூட்டணியிலிருந்து வெளியேற்ற அவர்கள் திட்டமிட்டனர். இதனால் தமிழர் விரோத அதிகாரிகளின்பேச்சைக்கேட்டு திமுக தலைமை தவாகவை புறக்கணித்துள்ளது.

சமூக நீதி இயக்கமான திமுக ஏன் தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க மறுக்கிறது.வன்னியர்களுக்காக 10.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் நடவடிக்கையை தடுத்தசக்தி எது?.தமிழக வேலை தமிழருக்கே என்ற சட்டத்தை திமுக அரசு நிறைவேற்றாதது ஏன்?. தமிழ் படித்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பது இன்னும் இங்கே சட்டமாகவில்லை.

கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக உள்ள சக்திகள் முதல்வர் ஸ்டாலினை சுயமாக சிந்தித்து முடிவெடுக்க விடாமல் மறுத்து, அதிகாரிகள் கொட்டமடிக்கிறார்கள் என நான் சொன்ன குற்றச்சாட்டுகளால் இப்போது தேர்தல் களத்திலும் எனக்கு நெருக்கடி கொடுக்கிறார்கள்.

தவாக நிர்வாகிகளுடன் நடத்திய ஆலோசனையின் அடிப்படையில், தமிழக வாழ்வுரிமை கட்சி, திமுக கூட்டணியிலிருந்து விலகுவதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கிறேன்.எங்களின் 10 அம்ச கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்போம்.

அதேபோல், நாட்டை மதத்தின் பெயரால் பிளவுப்படுத்தும் பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் தவாக இடம்பெறாது என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறேன்.எனவே எங்கள் கட்சி நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து எங்கள் கோரிக்கைகளை ஏற்கும் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்போம். 25க்கும் மேற்பட்ட சிறிய கட்சிகள், தமிழ்த் தேசிய அமைப்புகள் எங்களுடன் ஆலோசித்து வருகின்றன. அவர்களின் கருத்தை கேட்டு கூட்டணி குறித்து முடிவெடுப்போம் என்றார்.

# தமிழகத்தில் மார்ச் 26 வரை அதிகபட்ச வெப்பநிலை 5 டிகிரி உயர வாய்ப்பு: வானிலை முன்னறிவிப்பு!



சென்னை:

தமிழகத்தில் நாளை முதல் மார்ச் 26–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மன்னார் வளைகுடா முதல் தெற்கு மத்திய மகாராஷ்டிரா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும் (மார்ச் 23), நாளை மறுதினமும் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிருஇடங்களில்லேசான மழை பெய்யக்கூடும். 25, 26 தேதிகளில் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 27, 28 தேதிகளில் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் மார்ச் 26–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி,குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

லகிரி மாவட்டம் கீழ்கோத்தகிரி எஸ்டேட்டில் 6 செமீ, தேனி மாவட்டம் சோத்துப்பாறையில் 4 செமீ, தென்காசி மாவட்டம் குண்டாறு அணை, தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர், அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**



Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# போச்சம்பள்ளி அருகே டேங்கருடன் கூடிய டிராக்டர் திருட்டு வழக்கில் 24 மணி நேரத்தில் டிராக்டரை கண்டுபிடித்த போச்சம்பள்ளி போலீசார்

## டிராக்டர் ஓட்டுனரே டிராக்டரை திருடிவிட்டு, காலையில் உரிமையாளர் உடன் சேர்ந்து டிராக்டர் தேடிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்தஎர்ரம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் ஞானவேல் (30). சுமார் 10 லட்சம் மதிப்புள்ள டேங்கருடன் கூடிய டிராக்டரை வைத்துக்கொண்டு விவசாய பணிகளுக்கு டிராக்டரை பயன்படுத்தி பிழைப்பு நடத்தி வருகிறார். இந்நிலையில் கடந்த 20 ஆம் தேதி இரவு செங்கல் சூளை அருகே வழக்கமாக நிறுத்துமிடத்தில் டேங்கருடன் கூடிய டிராக்டரை நிறுத்திவிட்டு, அடுத்த நாள் அதிகாலை சுமார் 4 மணிக்கு வேலைக்காக டிராக்டர் எடுக்க வந்த போது, அந்த இடத்தில் டிராக்டர் இல்லாதது கண்டு அதிர்ச்சி அடைந்தார். இவரது டிராக்டர் ஓட்டுனர் காந்தி என்பவருக்கும் மற்ற நண்பர்களுக்கும் அலைபேசி மூலம் தொடர்புகொண்டு டிராக்டர் இல்லாத சம்பவம் குறித்து தகவல் கொடுத்ததை அடுத்து அனைவரும் சேர்ந்து அக்கம் பக்கத்தில் தேடி உள்ளனர். இதில் எங்கும் டிராக்டர் கிடைக்காததால், போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் ஓட்டுநர் காந்தியுடன் சென்று புகார் அளித்தனர். அதன் அடிப்படையில் போச்சம்பள்ளி போலீசார் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து சென்ற போது, திருப்பத்தூர் நோக்கி டிராக்டர் செல்வது பெட்ரோல் பங்கில் உள்ள சிசிடிவி காட்சியில் பதிவாகி இருந்ததை கண்டனர். இதையடுத்து டிராக்டர் ஓட்டி செல்பவரை உன்னிப்பாக கவனித்த போது, அந்த டிராக்டரின் ஓட்டுநரான காந்தியே அந்த வாகனத்தை திருடி செல்வது தெரியவந்தது. இதையடுத்து காந்தியைப் பிடித்து விசாரித்ததில், திருட்டு சம்பவத்தை ஒப்புக்கொண்டு, திருப்பத்தூர் மாவட்டம் புதூர்நாடு அருகே உள்ள ஒரு விவசாய மாந்தோப்பில் மறைத்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து ஓட்டுநர் காந்தி (22) மற்றும் அவருக்கு துணையாக இருந்த விக்னேஷ் (20) ஆகிய இருவரையும் கைது செய்தனர். கடத்தலுக்காக பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்தனர். இச்சம்பவம் கிராமத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# மாணவிக்கு நீதி கிடைக்கும் வகையில் குற்றவாளிக்கு தண்டனை வழங்கப்படும் மாணவியின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய கனிமொழி எம்.பி.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தில், 12-ஆம் வகுப்பு மாணவி கொடூரமாக பாலியல் வன்முறை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்ற நபர் கைதாகி, விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், மாணவியின் குடும்பத்தினரை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத்தலைவருமான கனிமொழி கருணாநிதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும், குற்றவாளிக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி: மாணவியின் குடும்பத்தினருக்கு சிறிய மனநிம்மதி தரக்கூடிய அளவுக்கு, காவல்துறை விரைந்து செயல்பட்டு குற்றவாளியை கைது செய்துள்ளனர்.

நிச்சயமாக இப்படிப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், விரைவில் மாணவிக்கு நீதி கிடைக்கும் வகையில் குற்றவாளிக்கு தண்டனை வழங்கப்படும் என்றார். இந்தச் சந்திப்பின்போது, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்கண்டேயன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# போச்சம்பள்ளி வாரசந்தைக்கு தானியங்களின் வரத்து அதிகரிப்பு தொவரை கொட்டை ரூ.95க்கு விலை போனதால் அள்ளிச் சென்ற குடும்ப பெண்கள்



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வாரச்சந்தை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் தமிழகத்தின் இரண்டாவது மிகப்பெரிய வாரச்சந்தையாகும்.

இச்சந்தையில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் புளி மற்றும் தானியங்களின் வரத்து அதிகரித்து காணப்படும். அந்தவகையில் இந்த வாரம் சுமார் 1 டன் அளவுக்கு தொவரைக் கொட்டை வரத்து காணப்பட்டது. உடைக்கப்படாத துவரை கொட்டை கிலோ 95க்கு விலை போனதால் குடும்பப் பெண்கள் மற்றும் வியாபாரிகள் மூட்டைமூட்டையாக வாங்கிச் சென்றனர். அதேபோல் அவரை ரூ.75க்கும், பச்சை பயிர் ரூ.80க்கும், கொள்ளு ரூ66க்கும், உளுந்து ரூ.87க்கும் விலை போனது.

வரும் வாரங்களில் வரத்து அதிகரித்து காணப்படும் என்பதால் விலை குறைய வாய்ப்புள்ளது என அப்பகுதி வியாபாரிகள் தெரிவித்தனர். போச்சம்பள்ளி வாரச்சந்தையில் தானியங்களை பெறுவதற்காக கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் அதிகாலை 5 மணி முதல் இருந்து வாங்கி செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடியில் சர்வதேச மகளிர்தின விழாவை முன்னிட்டு கபடி போட்டியில் துறைமுக ஆணையத்தலைவர் பரிசு வழங்கினார்



தூத்துக்குடியில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாவட்ட அளவிலான மகளிர் கபடி போட்டியில், தூத்துக்குடி அணி முதலிடம் பிடித்துக் கோப்பையைக் கைப்பற்றியது. தூத்துக்குடி 'ஜேசிஐ பேர்ல் சிட்டி குயின் பீஸ்' மகளிர் அமைப்பு சார்பில், பெண்கள் மட்டுமே பங்கேற்ற கபடி போட்டி தூத்துக்குடி மாவட்ட உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 10-க்கும் மேற்பட்ட அணிகள் கலந்துகொண்டன.

குறிப்பாக கோவில்பட்டி மின்னல் கபடி அணி, தென்காசி பாரத் மாதா, கோவில்பட்டி ஸ்டெபி, தூத்துக்குடி டெஸ்டினி, காயல்பட்டினம் ரத்னா, தூத்துக்குடி காமராஜ் கல்லூரி, முத்தையாபுரம் பிரசன்னா, நேசக்கரங்கள் மற்றும் வியாசா கல்லூரி ஆகிய அணிகள் விறுவிறுப்பாக விளையாடின. லீக் முறையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளின் இறுதியில் தூத்துக்குடி அணி முதலிடம், தென்காசி வியாசா கல்லூரி அணி இரண்டாமிடம், கோவில்பட்டி மின்னல் கபடி அணி மற்றும் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி அணி மூன்றாமிடம் பிடித்தன. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு அர்ஜுனா விருது பெற்ற கபடி வீரர் மனத்தி கணேசன் தலைமை தாங்கினார். ஜேசிஐ பேர்ல் சிட்டி குயின் பீஸ் தலைவர் பாலசுபா ஷென் மற்றும் செயலாளர் சுருதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராகத் தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் சுசாந்தகுமார் புரோகித் மற்றும் அவரது மனைவி ஷிபாலி புரோகித் ஆகியோர் கலந்துகொண்டு, வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்குப் பரிசுகளையும் சுழற்கோப்பைகளையும் வழங்கிப் பாராட்டினர்.

# நாடு முழுவதும் வங்கிகள், ஏ.டி.எம். பரிவர்த்தனைகளுக்கான புதிய கட்டணங்கள், விதிகள் ஏப். 1 முதல் அமலாகின்றன




ஏப்ரல் 1, 2026 முதல் HDFC, PNB மற்றும் Bandhan Bank போன்ற வங்கிகளில் மாதத்திற்கு 5 இலவச ஏடிஎம் (ATM) பரிவர்த்தனைகளுக்கு மேல் பயன்படுத்தினால், ஒவ்வொரு கூடுதல் பரிவர்த்தனைக்கும் 23 (மற்றும் ஜிஎஸ்டி வரிகள்) கட்டணமாக வசூலிக்கப்படும். இந்த புதிய விதிமுறை சொந்த வங்கி மற்றும் பிற வங்கி ஏடிஎம்கள், UPI வழி ரொக்கப் பணம் எடுத்தல் ஆகிய வற்றிற்கும் பொருந்தும். இருப்பு சரிபார்ப்பு (Balance Enquiry) போன்ற நிதி அல்லாத பரிவர்த்தனைகளும் இந்த வரம்பில் அடங்கும். இதுவரை ஏடிஎம்களில் QR Code ஸ்கேன் செய்து யுபிஐ மூலம் பணம் எடுப்பது தனிப்பட்ட முறையில் கணக்கிடப்பட்டது. ஆனால் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் யுபிஐ மூலம் எடுக்கும் பணமும் மாதாந்திர இலவச ஏடிஎம் பரிமாற்ற கணக்கிலேயே சேர்க்கப்படும். இலவச பரிமாற்ற வரம்பு முடிந்த பிறகு ஒவ்வொரு கூடுதல் பண பரிமாற்றத்திற்கும் ரூ.23+GST வசூலிக்கப்படும். இந்தியன் வங்கி தனது வாடிக்கையாளர்களின் செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தியை அனுப்பியுள்ளது. அதன்படி மாதம் 5 முறை ஏடிஎம்மில் பண பரிவர்த்தனையை கட்டணம் இல்லாமல் மேற்கொள்ளலாம் என்றும், அதற்கு மேல் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ரூ.17 கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி வரி வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறை அடுத்த மாதம் அதாவது ஏப்ரல் 20 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

மற்ற வங்கி ஏடிஎம்களைப் பயன்படுத்தும் போது மெட்ரோ நகரங்களில் 3 முறையும், மெட்ரோ நகரங்களில் 5 முறையும் இலவசமாகப் பயன்படுத்தலாம். இந்த வரம்பிற்கு பிறகு கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்படும். இந்த பண பரிவர்த்தனை வரம்பில் பணம் எடுப்பது மற்றும் இருப்பு சரிபார்ப்பு, மினி ஸ்டேட்மென்ட் போன்ற அனைத்து சேவைகளும் அடங்கும்.

கட்டணங்களைத் தவிர்க்க, இருப்பு சரிபார்ப்பு போன்ற சேவைகளுக்கு வங்கியின் மொபைல் ஆப் அல்லது நெட் பேங்கிங் வசதியைப் பயன்படுத்துவது நல்லது. வங்கிகளால் எடுக்கப்பட்ட இந்த முடிவுகள், சாதாரண மக்களை பண பரிவர்த்தனைகளுக்கு பதிலாக டிஜிட்டல் பரிவர்த்தனைகளை நோக்கி மாறும்படி கட்டாயப்படுத்தியுள்ளன. இந்த புதிய மாற்றங்களை மனதில் கொண்டு தேவையற்ற ஏடிஎம் வருகைகளைக் குறைப்பதன் மூலம் இந்த கூடுதல் கட்டணங்களைத் தவிர்க்கலாம்.

# ஊத்தங்கரை போச்சம்பள்ளி, பருகூர், திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு தனியார் பேருந்து இயங்காததால் பள்ளி மாணவிகள் அவதி




அரூரில் இருந்து தீர்த்தமலை கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை போச்சம்பள்ளி, பருகூர், திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு மாலை 6.30 மணி அளவில் இயங்க வேண்டிய TN 34 B 9199 என்ற தனியார் பேருந்து இயக்கப்படாததால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக பள்ளி முடியும் நேரங்களில் இந்த பேருந்து முறையாக வராததால், மாணவிகள் பாதுகாப்பு சிக்கல்களுடன் வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள் கடும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், இந்த பேருந்து தினசரி முறையாக இயக்கப்பட வேண்டும் என்றும், மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இந்த தனியார் பேருந்து தொடர்ந்து இயக்கப்படாத நிலை நீடித்தால், அதே வழித்தடத்தில் அரசு பேருந்துகளை தினசரி இயக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், வட்டார போக்குவரத்து அலுவலர் நேரில் ஆய்வு செய்து, பேருந்து சேவை முறையாக நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வலியுறுத்தி வருகின்றனர்

# டிடர்ஜென்ட், சோப்பு, லிக்யூட், டிடர்ஜென்ட், வாஷிங் பவுடர் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் விலை கடுமையாக உயர்வு



டிடர்ஜென்ட், சோப்பு, லிக்யூட், டிடர்ஜென்ட், வாஷிங் பவுடர் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மூலப்பொருட்களின் விலை உயர்வு, தட்டுப்பாட்டால் சோப்பு தயாரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. சோப்பு விலை ஏற்றத்திற்கு வாடிக்கையாளர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று உற்பத்தியாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது

# வி.சி.க சார்பில் மதுராந்தகம் (தனி) தொகுதியில் போட்டி வழக்கறிஞர் பரந்தாமன் கட்சி அலுவலகத்தில் விருப்ப மனு அளித்தார்



செங்கல்பட்டு மாவட்டம் 2026 தமிழக சட்டமன்ற பொது தேர்தலில் மதுராந்தகம் தனித் தொகுதியில் போட்டியிட அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் ஆனைக்குன்னம் கிராமத்தைச் சார்ந்த வழக்கறிஞர் க.பரந்தாமன் அவர்கள் கட்சியில் கால் நூற்றாண்டு கடந்த நிலையில் வெகுஜன மக்களுக்காக விடுதலை சிறுத்தைகள் கட்சி சென்னை அம்பேத்கர் திடலில் மதுராந்தகம் தனித் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு மற்றும் கட்டணத் தொகையாக ரூபாய் ஐந்தாயிரம் செலுத்தி விருப்ப மனு அளித்தார்.

# வி.சி.க சார்பில் செய்யூர் (தனி) தொகுதியில் போட்டியிட விருப்பமனு

## மண்டல செயலாளர் சூ.க.ஆதவன் கட்சி அலுவலகத்தில் விருப்பமனு அளித்தார்



செங்கல்பட்டு மாவட்டம் எதிர்வரும் 2026 சட்டமன்றபொது தேர்தலில் செய்யூர் தனி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆரம்ப கால இயக்கமாக இருந்தே கட்சியின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக செயல்பட்டு செய்யூர் மற்றும் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் முகாம் தோறும் கட்டமைப்பு ஏற்படுத்தி தனக்கென பொதுமக்கள் கட்சியினிரிடையே பெரும் செல்வாக்குடன் செயல்படும் மேனாள் மாவட்ட செயலாளர் தற்போது கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களால் காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதியின் மண்டல செயலாளராக அறிவித்துள்ள. சூனாம்பேடு சூ.க.ஆதவன் செய்யூர் தனி தொகுதியில் போட்டியிட சென்னை அம்பேத்கர் திடலில் விருப்ப மனு கட்டண தொகையாக ஐந்தாயிரம் செலுத்தி மனு அளித்தார் உடன் மகளிர் விடுதலை இயக்கம் மாநில செயலாளர் தமிழினி, மாவட்ட பொருளாளர் சாரங்கன் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் மொறப்பாக்கம் ஏ.க.தயாநிதி , மாவட்ட அமைப்பாளர் கழனிப்பாக்கம் தலித் ராஜன்,ஒன்றிய அமைப்பாளர் தண்டரைபேட்டை வெங்கடேஷ், ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஷ், மற்றும் மொறப்பாக்கம் அருள்,லோகேஷ், மற்றும் சென்னை மாவட்டத்தின் வட்டச் செயலாளர் சூ.க.கபிலன்,ஒன்றிய அமெப்பாளர் சூ.கோ.வினோத்,ஒன்றியதுணை அமைப்பாளர் இந்தலூர் கிளிநொச்சி சமரன், சிவ.சிவராஜ், ஆகியோர் அருகில் இருந்தனர்

# ஸ்ரீமுஷ்ணம் அருகே அரசு பள்ளி நூற்றாண்டு விழா



கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் அருகே ஸ்ரீ ஆதி வராகநல்வார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நூற்றாண்டு விழா புதன்கிழமை மாலை நடைபெற்றது.

பள்ளித் தலைமையாசிரியர் அருள்வடிவேலன் வரவேற்றார். ஆசிரியர் ஜெயக்குமார் ஆண்டறிக்கை வாசித்தார்.

மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் ராஜாராம் நூற்றாண்டு விழா நினைவுப் வாயிலை திறந்து வைத்து தலைமையுரை ஆற்றினார்.

விழாவில் சேத்தியாதோப்பு டி.எஸ்.பி. ரவிச்சந்திரவர்த்தி, வட்டாரக் கல்வி அலுவலர் மன்னன், ஆதியோர் நன்றி கூறினார்.

நூற்றாண்டு விழா நினைவுச் சின்னத்தை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினர்.

வட்டார வள மைய மேற்பார்வையாளர் குணசேகரன், ஆசிரியர் பயிற்றுநர் பரமசிவம்,வட்டாரவளமைய அலுவலர் சங்கர், வழக்கறிஞர் அருள் ஆகியோர் பங்கேற்றனர்.

இப்பள்ளியில் பணியாற்றிய ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பணிமாறுதலில் சென்றவர்கள் உள்ளிட்ட அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

எந்தவொரு கல்வி உரிமை என்ற தேசிய விழிப்புணர்வு, மாணவர்களின் கலை நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றன. ஆசிரியர் அருண்மொழி நன்றி கூறினார்.

# பல ஆண்டுகளாக பணியாற்றும் பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் சிறப்பு தகுதி தேர்வு எழுத எமிஸ் (EMIS) தரவு எண் வழங்க வேண்டும்


தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு
TAMILNADU ARASU UZHIYARGAL ASIRIYARGAL NALA KOOTTAMAIPPU SANGAM
மாநில அமைப்பு தொடர்பு எண் : 9445454044
நிறுவனத் தலைவர் திருவுரு சா.அருணன்
பொ.அருள் ச.மணி
பி.எஸ்.அமல்ராஜ்
தேதி : 22.03.2026

ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரின் கோரிக்கையை ஏற்றும் மேலும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கள்ளர் சீர்மரபினர் உள்ளிட்ட சமூக நீதி விடுதி காப்பாளர்களாகப் பல ஆண்டுகளாக பணியாற்றும் பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியகள் சிறப்பு தகுதி தேர்வு எழுத எமிஸ் (EMIS) தரவு எண் வழங்க கோருதல்மற்றும்இடைநிலை ஆசிரியர்களுக்கு +2 மதிப்பெண் சான்றிதழ் இல்லாத பட்சத்தில் பத்தாம் வகுப்பு சான்றிதழே போதுமானதாக அறிவிக்க கோருதல்

ஐயா அவர்களுக்கு வணக்கம்

கடந்த ஆண்டு செப்டம்பர் மாத உச்ச நீதி மன்றம் ஒய்வுபெற 5 ஆண்டுகளுக்கு மேல் உள்ள இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் தொடர்ந்து பணியில் நீடிக்க கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி அடைய வேண்டும் என்ற அதிர்ச்சி தீர்ப்பு அளித்தது , இந்த தீர்ப்பால் ஒரு ஆசிரியர் கூட பாதிப்பு அடையக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் அனைத்து சங்கங்களின் நிர்வாகிகளை அழைத்து ஆலோசனை நடத்தி அனைவரது கருத்துக்களை கேட்டறிந்தார்அப்போதுதமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின்சார்பில்வழங்கப்பட்ட ஆலோசனைகள் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு சிறப்பு தகுதி தேர்வை நடத்த வேண்டும் எனவும் தேர்ச்சி பெற 40% விழுக்காடு மதிப்பெண் எடுத்தால் போதுமானதாக இருக்க வேண்டும் எனவும் முதல் தாள் இரண்டாம் தாள் இரண்டிற்கும் பணி மூப்பிற்கு ஏற்ப மதிப்பெண் வழங்க வேண்டும் செய்முறைக்கு மதிப்பெண் வழங்க வேண்டும் பாடவாரியான ஆசிரியர்களுக்கு அந்தந்த பாடத்தில்இருந்தேகேள்விகள் இடம்பெற வேண்டும் உள்ளிட்ட ஆலோசனைகளை வழங்கினோம், அனைத்து கோரிக்கைகளையும் உள்வாங்கி மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யமொழி அவர்கள் எந்த ஒரு ஆசிரியரையும் இந்த அரசு கை விடாது என வாக்குறுதி அளித்தார், பின்பு சமத்துவத்தை நிலைநாட்டும் விதமாகவும் பணியாற்றும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறப்புத் தகுதி தேர்வை அறிவித்து சென்ற பிப்ரவரி மாதம் 18ஆம்தேதி முதல்விண்ணப்பம் செய்ய உத்தரவிட்டும் வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி கடைசி தேதி அறிவித்து மேலும் திருத்தம் ஏதாவது இருப்பின் ஏப்ரல் 11ஆம்தேதி முதல் 13ஆம் தேதி வரை திருத்திக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது, அறிவிப்பின்படி முதல் தாள் தேர்வு ஜூலை 4ஆம் தேதியும் இரண்டாம் தாள் 5ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது இந்த அறிவிப்பை வரவேற்று தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வரவேற்று நன்றியை தெரிவித்துக் கொண்டோம்

மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நலத்துறை , கள்ளர் சிர் மரபினர் உள்ளிட்ட விடுதிகளில் பல ஆண்டுகளாக மாற்று பணியில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு எமிஸ் எனும் ஆசிரியர் குறியீட்டு எண் அவர்களுக்கு இல்லை இந்த குறியீட்டு எண் இருந்தால் மட்டுமே ஆசிரியர் தகுதி தேர்வு எழுத முடியும் இந்த நிலையில் தான் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்கள் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அவர்கள் விடுதி காப்பாளர்களுக்கு எமிஸ் குறியீட்டு எண் வழங்கி தேர்விற்கு அனுமதிக்க கேட்டு கடிதம் எழுதி உள்ளார் அதன் அடிப்படையில் ஐயா அவர்கள் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு உத்தரவிட்டு எமிஸ் குறியீட்டு எண் வழங்கி உதவிட கேட்டுக் கொள்கிறேன். மேலும் இடைநிலை ஆசிரியர்கள் ஓவியம் போன்ற சிறப்பாசியர்கள் பத்தாம் வகுப்புவரை பயின்று ஆசிரியர்களாக பணியாற்றி வருகிறார்கள், ஓவியக் கல்லூரியில் பல ஆண்டுகளாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ஐந்து ஆண்டு பட்டப்படிப்பு படிக்கால் என்ற விதியை ஏற்படுத்தி இரண்டு ஆண்டுகள் அடிப்படை கல்வியும் மூன்று ஆண்டுகள் பட்டப்படிப்பும் சென்னை பல்கலைக்கழகத்தால் பட்டம் வழங்கப்பட்டிருந்தது தற்போது +2 என அறிவித்து நான்கு ஆண்டு பட்டப்படிப்பாக மாற்றப்பட்டும் பட்டம் வழங்கப்பட்டு வருகிறது இதனையும் கருத்தில் கொண்டும் இதுபோன்ற பட்டப்படிப்பிற்கும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மட்டும் போதுமானதாக அறிவித்து இணையத்தில் பதிவேற்றும் வசதியை ஏற்படுத்தி உதவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

# பவானிசாகர் தனித்தொகுதியில் போட்டியிட ஈரோடு தெற்கு மாவட்ட மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ப.விஜயகுமார் விருப்பம் சென்னை அறிவாலய நேர்காணலில் பங்கேற்பு



ஈரோடு: வரும் சட்டமன்றத் தேர்தலில் ஈரோடு மாவட்டம்,பவானிசாகர் தனித் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கோரி, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ப.விஜயகுமார் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற விருப்ப மனுதாரர்களுக்கான நேர்காணலில் கலந்து கொண்டார். ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இவர், 1992-ஆம் ஆண்டு முதல் (தனது 12-வது வயது முதல்) கழகத்தின் பல்வேறு போராட்டங்கள் மற்றும் தேர்தல் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். எம்.ஏ., பி.எல்., பட்டதாரியான விஜயகுமார், கடந்த 2012 முதல் 2018 வரை பெரிய சேமூர் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளராகவும், 2018 முதல் தற்போது வரை அதே பகுதியில் அமைப்பாளராகவும் பதவி வகித்து வருகிறார்.

மேலும் 2020 முதல் திமுகவழக்கறிஞர்அணி உறுப்பினராகவும் கட்சிப் பணியாற்றி வரும் இவர், 2012-ல் தலைவர் கலைஞர் அறிவித்த சிறை நிரப்பும் போராட்டம், அதிமுக அரசின் மின்வெட்டைக் கண்டித்த அறப்போர், சேது சமுத்திர திட்டப் போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் முன்னின்று பங்கேற்றுள்ளார். கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் வாக்குச்சாவடி முகவராகவும்,2022 உள்ளாட்சித் தேர்தலில் தலைமை முகவராகவும் பணியாற்றி, அதிமுக வேட்பாளரை வைப்புத்தொகை (டெபாசிட்) இழக்கச்செய்ததில் முக்கியப் பங்காற்றியுள்ளார். கொரோனா கால நிவாரணப் பணிகள் மற்றும் நீட் தேர்வு எதிர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் என மக்கள் நலப்பணிகளிலும் இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சிறப்பாகச் செயல்பட்டுள்ளார். கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடையே எளிமையாக அணுகக்கூடிய நற்பெயரைக் கொண்டுள்ள இவருக்கு,மாவட்ட அளவில் ஆதரவு பெருகி வருகிறது. இந்த நீண்டகால விசுவாசமான கட்சிப் பணியின் அடிப்படையில், பவானிசாகர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டால் கழகத்தின் வெற்றியை உறுதி செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் அவர் களம் கண்டுள்ளார்.

### ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில்

# வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஈரோடு மாவட்டம், கொல்லம்பாளையம், லோட்டஸ் மருத்துவமனை அருகில் நேற்று (22.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பேசும் போது தெரிவித்ததாவது,

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 23.04.2026 அன்று நடைபெறவுள்ளது என (15.03.2026) அன்று அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்றைய தினம், கொல்லம்பாளையம் லோட்டஸ் மருத்துவமனை அருகில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சட்டமன்றபொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதைதொடர்ந்து,ஈரோடு மாவட்டத்தில் 8 சட்டமன்ற தொகுதியிலும் தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாடு பணியிலும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி, மூன்று வகையான பணிகள் நடைபெற்று வருகிறது தேர்தலுக்கான பணியாளர்களை தயார் செய்து, அவர்களுக்கு பயிற்சி அளிப்பது, அதற்கான வாக்குப்பதிவு இயந்திரங்களை தயார் செய்வது, ஈரோடு மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பொதுமக்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், தொழில் நிறுவனங்கள்,பள்ளிகள், கல்லூரிகள் என அனைத்து தரப்பு மக்களும் இந்த தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. மேலும், தேர்தலில் பணத்தை பயன்படுத்தக்கூடாது என்பதற்காக அதற்கான ஏற்பாடுகளை பறக்கும் படை குழுக்கள் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுக்கள் அனைத்து பகுதிகளிலும் சோதனைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று வகையான பணிகள் நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் தங்களுடைய ஒத்துழைப்பை தேர்தல் நாளன்று 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும். நியாயமானதாகவும், சுதந்திரமானதாகவும், எந்த விதமான தூண்டுதலும் இல்லாத ஒரு தேர்தலை நாம் நடத்துவதற்கு மக்களாட்சி முறையை நம்முடைய நாட்டில் நிறுவுவதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, ஈரோடு மாவட்டதேர்தல்அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மாநகராட்சி, கொல்லம்பாளையத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் மேளதாளத்துடன் 99- ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி "தேர்தல்திருவிழா" என்ற அழைப்பிதழை வாக்காளரின் வீடு வீடு வீடாக சென்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், 98 ஈரோடு கிழக்கு, 99 ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொது பார்வையாளராக நியமிக்கப்பட்ட மினிஸ்தி,துணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட ஊராட்சி அலுவலர்,(செயலர்)தனம், ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்.



ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காசிபாளையம் பேரூராட்சியில், வடக்கு மாவட்ட செயலாளர் நல்லசிவம் முன்னிலையில், அதிமுகவைச் சேர்ந்த 8வது வார்டு மன்ற உறுப்பினர் சிவகாமி, அம்பிகா, வளர்மதி, மாராள், சாந்தாள், சென்னியம்மாள் உள்ளிட்ட பலர் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்வில் காசிபாளையம் பேரூர் செயலாளர் பழனிசாமி மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாநகரில் உள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன்,சின்ன மாரியம்மன் மற்றும் கரை வாய்க்கால் மாரியம்மன் கோவில் வருடாந்திர குண்டம் மற்றும் தேர்த்திருவிழா கடந்த வாரம் பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக கம்பம் நடுவிழா கருங்கல்பாளையம் காவிரி ஆற்றிலிருந்து புனிதமான கம்பங்கள் எடுத்து வரப்பட்டு, பூசாரிகளால் சுமந்து வரப்பட்டு முறைப்படி நடப்பட்டன. நேற்று முன்தினம் முதல் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இந்தத் திருக்கம்பத்திற்குப் புனித நீர் ஊற்றிப் பக்திப் பெருக்குடன் வழிபடத் தொடங்கியுள்ளனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (21.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத்தொகுதி, பெத்தாம்பாளையம், வாய்க்கால்பாளையம் பகுதியில் பறக்கும்படை குழுவினர்கள் மற்றும் நிலையான கண்காணிப்புக்குழுவினர்களின் பணியினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

### கோவை பந்தயசாலையில் ராயல்கேர் மருத்துவமனை சார்பாக

# தலைக்காயம் குறித்த விழிப்புணர்வு மாதத்தை குறிக்கும் வகையில் நடைபெற்ற வாக்கித்தான் போட்டி

## 500க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர்




உலக தலைக் காயம் மற்றும்பல்வேறு காயங்கள் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, ராயல் கேர் சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனை ஒரு விழிப்புணர்வு வாக்கித்தானை ஏற்பாடு செய்தது. இது மார்ச் 22 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சக்தி சுகர்ஸ், கார்ப்பரேட் அலுவலகம், ரேஸ்கோர்ஸ் முதல் ராயல் கேர் மருத்துவமனை, சிட்டி யூனிட், டாக்டர் நஞ்சப்பா சாலை வரை நடைபெற்றது. இந்த ரேலி டாக்டர் பி. கோசல் ராம், தலைவர், ஐ.எம்.ஏ.,கோயம்புத்தூர் கிளை மற்றும் டாக்டர் பரமேஸ்வரன், கௌரவ செயலாளர், ஐ.எம்.ஏ., கோயம்புத்தூர் கிளையால் துவக்கி வைக்கப்பட்டது. இதில் டாக்டர் கே. மாதேஸ்வரன், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், ராயல் கேர் மருத்துவமனை, நரம்பு மற்றும் முதுகெலும்பு அறுவை சிறப்பு மருத்துவர் முன்னிலையில் நடைபெற்றது. டாக்டர் கே. மாதேஸ்வரன், தலைவர் மற்றும் நிர்வாகஇயக்குநர்கூறியதாவது.. அதிக வேக வாகனங்கள், விழிப்புணர்வு இல்லாமை, போக்குவரத்து பின்பற்றாமை, ஹெல்மெட் மற்றும் சீட் பெல்ட் அணியாமை, அதிவேகம் மற்றும் வாகனங்களின் மோசமான பராமரிப்பு ஆகியவற்றால்பலவிபத்துக்கள் ஏற்பட்டு தலைக் காயங்கள் ஏற்படுகின்றன.ராயல் கேர் மருத்துவமனை பொது விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில் இந்த திட்டத்தை நடத்துகிறது என்றார்.

தொடர்ந்து 500க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், பாரா மருத்துவர்கள், நிர்வாக ஊழியர்கள், மருத்துவ மாணவ மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் இதில் பங்கேற்று பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# தேர்தல் ஆணைய இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் (Randomization) ஒதுக்கீடு

## ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 –ஐ முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

08 சட்டமன்ற தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (EVM & VVPAT) 1-ம் கட்டமாக இந்திய தேர்தல் ஆணைய இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் (Randomization) ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு, ஈரோடு மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான முதல் கட்ட சுழற்சி (1st Randomization) அங்கீகரிக்கப்பட்ட தேசிய

மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் உள்ள கூட்டரங்கில் எதிர்வரும் 23.03.2026 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளளது. அதனைத் தொடர்ந்து 24.03.206 அன்று காலை 06.00 மணி முதல் அனைத்து 08 சட்டமன்ற தொகுதிக்கும் பிரித்து அனுப்பபட உள்ளது. இக்கூட்டத்தில் 08 சட்டமன்றதொகுதிக்குட்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள், காவல் கண்காணிப்பாளர்,காவல் துணை கண்காணிப்பாளர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்து உள்ளார்.



ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள புகழ்பெற்ற கொடிவேரி அணையில் மக்கள் கூட்டம் அலைமோதியது. ஈரோடு மற்றும் அண்டை மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததால் அணைப்பகுதி களைகட்டியது. வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்கப் பொதுமக்கள் அருவியில் நீராடி மகிழ்ந்தனர். அசம்பாவிதங்களைத் தவிர்க்கப் போலீசார் பலத்த பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.